இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், கிருஷ்ணகிரி மாவட்டம் சூளகிரி பீலாளம் கிராமத்தில், 300 ஏக்கரில் தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின், வருங்கால நகர் திறன் பூங்கா அமையவுள்ள இடத்தை நேற்று பார்வையிட்டார்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 24.09.2023 அன்று கிருஷ்ணகிரி மாவட்ட விளையாட்டு அரங்க வளாகத்தில் உள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய மாணவர் விளையாட்டு விடுதியில் திடீர் ஆய்வு மேற்கொண்டு, மாணவர்களுடன் கலந்துரையாடி, மாணவர்களுக்கு வழங்கப்பட உள்ள உணவின் தரம் குறித்து ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறைச் செயலாளர் டாக்டர் தரேஸ் அகமது, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கே.எம். சரயு மற்றும் அரசுத்துறை உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 24.09.2023 அன்று கிருஷ்ணகிரி மாவட்ட விளையாட்டு அரங்க வளாகத்தில் உள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவர் விளையாட்டு விடுதியில் திடீர் ஆய்வு மேற்கொண்டு, மாணவர்களுடன் கலந்துரையாடி, விடுதியில் உள்ள அடிப்படை வசதிகள், உணவு, குடிநீர், மின்சார வசதி, கழிப்பறை வசதி மற்றும் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்றது குறித்து மாணவர்களிடம் கேட்டறிந்தார். இந்த ஆய்வின்போது, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறைச் செயலாளர் டாக்டர் தரேஸ் அகமது, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கே.எம். சரயு மற்றும் அரசுத்துறை உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 24.09.2023 அன்று கிருஷ்ணகிரி மாவட்டம், அரசு ஆதிதிராவிடர் மாணவர் விடுதியில் திடீர் ஆய்வு மேற்கொண்டு, உணவுப்பொருட்களின் இருப்புக் குறித்து பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறைச் செயலாளர் டாக்டர் தரேஸ் அகமது, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கே.எம். சரயு மற்றும் அரசுத்துறை உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 24.09.2023 அன்று கிருஷ்ணகிரி மாவட்டம், அரசு ஆதிதிராவிடர் கல்லூரி மாணவர் விடுதியில் திடீர் ஆய்வு மேற்கொண்டு, மாணவர்கள் வருகைப் பதிவேடு, உணவுப் பொருட்கள் இருப்பு குறித்த பதிவேடுகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி அவர்கள், சிறப்புத் திட்ட செயலாக்கத் துறைச் செயலாளர் டாக்டர் தரேஸ் அகமது, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கே.எம். சரயு, கூடுதல் ஆட்சியர் திருமதி வந்தனா கார்க் மற்றும் அரசுத்துறை உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 24.09.2023 அன்று கிருஷ்ணகிரி மாவட்ட அரசு தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் விடுதியில் திடீர் ஆய்வு மேற்கொண்டு, மாணவர்களுடன் கலந்துரையாடி, விடுதியில் உள்ள அடிப்படை வசதிகள், உணவு, குடிநீர், மின்சார வசதி, கழிப்பறை வசதி மற்றும் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்றது குறித்து மாணவர்களிடம் கேட்டறிந்தார். இந்த ஆய்வின்போது, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறைச் செயலாளர் டாக்டர் தரேஸ் அகமது, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கே.எம். சரயு மற்றும் அரசுத்துறை உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

மாணவர்களுடன் கலந்துரையாடி நிறை - குறைகளை கேட்டறிந்தார்!

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மாணவர் விடுதிகளில் திடீர் ஆய்வு!

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மேற்கொண்டார்!

கிருஷ்ணகிரி, செப். 26-

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கிருஷ்ணகிரி, தர்மபுரி மற்றும் சேலம் மாவட்டங்களில் 25.09.2023 முதல் 27.09.2023 வரை மூன்று நாட்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கின்றார். 24.09.2023 அன்று கிருஷ்ணகிரி மாவட்டத்துக்கு வருகை தந்த அமைச்சர் அவர்கள் அங்குள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய மாணவர் விடுதியில் நேரில் ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வின் போது, அங்கு தங்கி பயிற்சி பெற்று வருகின்ற மாணவர்களுடன் கலந்துரையாடி, விடுதி மாணவர்களின் தங்கும் அறை, சமையலறை மற்றும் கழிப்பறை உள்ளிட்ட இடங்களை ஆய்வு செய்தார். மேலும், உணவுப் பட்டியலில் இடம்பெற்ற தக வல்களைக் கேட்டறிந்து, உணவுப் பொருட்கள் தரமாக உள்ளதா என ஆய்வு செய்து, விடுதியில் பயிலும் மாணவர்களின் உடல்திறன் மற்றும் ஊட்டச்சத்தை அதிகரிக்கும் வகையில் தரமான உணவினை வழங்குவதோடு, அனைத்து வசதிகளையும் முறையாக வழங்கிட சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்!

மேலும், ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் கிருஷ்ணகிரி காட்டுநாயக்கன்பள்ளியில் செயல்பட்டு வருகிற அரசு தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் விடுதியினை ஆய்வு செய்த அமைச்சர் அவர்கள், விடுதியிலுள்ள வசதிகள் குறித்து மாணவர்களின் கருத்துக்களைக் கேட்டறிந்து சமையற்கூடம், அரிசி உள்ளிட்ட பொருட்கள் வைக்கப்பட்டிருந்த அறை, உணவுக்கூடம், தங்குமிடம், கழிப்பறைகள் என விடுதியில் உள்ள அனைத்து வசதிகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும், அங்குள்ள பதிவேட்டை ஆய்வு செய்து மாணவர்களின் எண்ணிக்கையை கேட்டறிந்து, கல்வியின் பொருட்டு வீட்டை விட்டு வெகுதூரத்தில் உள்ள விடுதியில் தங்கி படிக்கின்ற மாணவர்களுக்கு அனைத்து வசதிகளையும் சிறப்பாக செய்து கொடுக்க வேண்டுமென அலுவலர்கள் மற்றும் விடுதிப் பணியாளர்களிடம் அறிவுறுத்தினார்.

விடுதிகள் முழுவதும் ஆய்வு!

பின்னர், தமிழ்நாடு அரசு ஆதிதிராவிடர் நலத்துறை கட்டுப்பாட்டில் இயங்கி வருகிற கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவர்களுக்கான விடுதியில் ஆய்வு மேற்கொண்டு சேமிப்பு அறையில் வைக்கப்பட்டிருந்த அரிசி, சமையல் எரிவாயு உள்ளிட்ட சமையல் பொருட்களின் இருப்பை பதிவேட்டுடன் ஒப்பிட்டு சரியான அளவில் இருக்கின்றதா என்று ஆய்வு செய்தார். மேலும், மாணவர்கள் மற்றும் விடுதிப் பணியாளர்கள் எண்ணிக்கை தொடர்பான தகவல்களைக் கேட்டறிந்த பின் உணவுக்கூடம், தங்குமிடம், குளியலறை மற்றும் கழிப்பிட வசதிகளை ஆய்வு செய்து, மாணவர்கள் தெரிவித்த நிறை, குறைகளின் அடிப்படையில் அவற்றை நிவர்த்தி செய்திட அலுவலர்களிடம் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது, உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறைச் செயலாளர் டாக்டர் தரேஸ் அகமது, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கே.எம். சரயு, கூடுதல் ஆட்சியர் திருமதி வந்தனா கார்க் மற்றும் அரசுத்துறை உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

காளையார் கோவிலில் கலைஞர் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம்!

7000 பேருக்கு நலத்திட்ட உதவிகள்!

அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் - ஆ.ராசா. எம்.பி. வழங்குகிறார்கள்!

காளையார்கோவில், செப்.26-

சிவகங்கை மாவட்டத்தில் கலைஞர் நூற்றாண்டு பிறந்தநாள் பொதுக்கூட்டங்கள் ஒன்றிய, நகர, பேரூர், கழகங்கள் சார்பிலும் மற்றும் பல்வேறு அணிகளின் சார்பில் நடைபெற்று வருகிறது. இதன் தொடர்ச்சியாக காளையார்கோவில் கிழக்கு ஒன்றிய தி.முக. சார்பில் வருகிற 30ஆம் தேதி சனிக்கிழமை மாலை 4 மணி அளவில் காளையார் கோவில் தெப்பக்குளம் தென்கரையில் கலைஞர் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம் 7000 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி ஒன்றிய கழகச் செயலாளரும் முன்னாள் ஒன்றியக்குழு தலைவருமான வே.ஆரோக்கியசாமி தலைமையில் நடைபெறுகிறது.

ஒன்றிய செயலாளர்கள் யோக.கிருஸ்ணகுமார் ஆர். எம். கென்னடி ஆகியோர் வரவேற்றுப் பேசுகிறார்கள்.பொதுக்குழு உறுப்பினர் பி.டி..ஆர்.முத்து நாட்டரசன் கோட்டை பேரூராட்சி மன்ற தலைவர் திருமதி பிரியதர்ஷினி கவிராஜ், நிர்வாகிகள் முத்து, வனிதா கண்ணதாசன், கருப்புசாமி, பி.கந்தசாமி, சி.குழந்தைசாமி, எம்.முருகேசன்,முன்னாள் ஒன்றியக் குழுத் தேவர் திருமதி அருட்செல்விஅரசு, எஸ்தர் மேரிஸ்டீபன், சவுந்திர ராஜன், தினேஷ்அரசு, ஆர்.ஜெயராமன் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

இந்த நிகழ்ச்சியில் 7000 பயனர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கியும், கலைஞர் குறித்தும் சிவகங்கை மாவட்ட கழகச் செயலாளரும், கூட்டுறவுத்துறை அமைச்சருமான கே.ஆர். பெரியகருப்பன், கழக துணை பொது செயலாளர் முன்னாள் ஒன்றிய அமைச்சர் ஆ.ராசா எம்.பி. முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், முன்னாள் அமைச்சர் திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. ஆகியோர் சிறப்புரை ஆற்றுகிறார்கள்.

இந்த பொதுக்கூட்டத்தில் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் கலந்து கொள்கிறார்கள்.

கூட்டத்திற்கான ஏற்பாடுகளை கிழக்கு ஒன்றிய செயலாளர் வே.ஆரோக்கிய சாமி தலைமையில் ஒன்றிய கழக நிர்வாகிகள் செய்து வருகிறார்கள். நிகழ்ச்சியில் பாகமுகவர்களுக்கு கைபேசி வழங்குதல், கைம்பெண்களுக்கு தையல் எந்திரம் வழங்குதல் ,கழக முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்குதல், மாற்றுத்திறனாளிகள் மற்றும் ஏழை - எளிய மாணவர்களுக்கு கல்வி நிதி உதவி வழங்குதல், ஆதரவற்ற தொண்டு நிறுவனங்களுக்கு அரிசி மூட்டை வழங்குதல் போன்ற நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றது.